**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24 ம் நாள் செவ்வாய்கிழமை

**இ.ம.எண்.14/2025 அதன் அ.வ.எண்.235/2022**

**கண்ணன்,**
**மனுதாரரின் பொது அதிகார முகவரான**
**சேதுராம சுந்தரம் மூலம்** ... மனுதாரர் /1ம் பிரதிவாதி

–எதிர்–

மைதீன் பிச்சை ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என்முன்பாக 05.02.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.ராமகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.S.அபுதாகீர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு ஆவணங்களையும் ஆராய்ந்து இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**உத்தரவு**

அசல் வழக்கில் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட மனுதாரரை மீண்டும் அழைத்து விசாரிக்க அனுமதி அளிக்க உத்தரவிடக்கோரி, மனுதாரரால் கட்டளை 18 விதி 17 மற்றும் பிரிவு 151 சி.பி.சி.ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்**

2.1) இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கின் 1ம் பிரதிவாதியின் பொது அதிகார முகவர் என்றும், எதிர்மனுதாரர்/வாதி அசல் வழக்கை மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு எதிராக பிராது 2ம் தபசில் சொத்தைப் பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரமும், பிராது 3ம் தபசில் சொத்தைப்

பொறுத்து செயலுறுத்துக் கட்டளை பரிகாரமும் கோரி தாக்கல் செய்துள்ளார் என்றும், 1ம் பிரதிவாதி வெளிநாட்டில் குடியிருந்து வந்ததால் மனுதாரர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார் என்றும், தற்போது 1ம் பிரதிவாதி இந்தியா வந்து விட்டார் என்றும், எனவே, மேற்படியாரை பி.வா.சா.3 ஆக விசாரணை செய்ய அனுமதி கோரியும், தபசில் சொத்திற்கான ஆவணங்களை குறியீடு செய்யக் கோரியும், இ.ம.எண்.11/2025 மற்றும் இ.ம.எண்.12/2025 ஆகிய மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது எனக் கூறப்பட்டுள்ளது.

2.2) மேற்படி இ.ம.எண்.12/2025 மனுவில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கை தீர்மானிக்கக் கூடிய முக்கியமான ஆவணங்கள் என்றும், எனவே, மேற்படி ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட மனுதாரரை மீண்டும் அழைத்து விசாரணை செய்ய வேண்டியது அவசியம் எனக்கூறி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

**<u>3) எதிருரை சுருக்கம்</u>**

3.1) மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல என்றும், அசல் வழக்கில் மனுதாரர் தரப்பில் கூடுதல் ஆவணங்களை ஏற்று குறியீடு செய்ய வேண்டியும், பி.வா.சா.1 க்கு பவர் கொடுத்த 1ம் பிரதிவாதி பி.வா.சா.3 ஆக விசாரிக்கக் கோரி தாக்கல் செய்த இ.ம.எண்.11/2025 மற்றும் 12/2025 ஆகிய மனுக்களானது தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றும், ஆனால் மேற்படி உத்தரவிற்கு எதிராக மனுதாரர் எந்தவித மேல்முறையீட்டு மனுவோ, சீராய்வு மனுவோ தாக்கல் செய்யாமல் மீண்டும் அதே ஆவணங்களை குறியீடு செய்ய மனு தாக்கல் செய்ய முடியாது என கூறப்பட்டுள்ளது.

3.2) மேற்படி ஆவணங்களை ஏற்றுக் கொள்ள முடியாத போது பி.வா.சா.1 மூலமாக ஆவணங்களை குறியீடு செய்வதற்காக பி.வா.சா.1 ஐ மீண்டும் அழைத்து விசாரணை செய்யக் கோருவது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்றும், அசல் வழக்கினை காலம் கடத்தவும், மேற்படி ஆவணங்கள் மனுதாரரின் வழக்கை நிரூபிக்கக்கூடிய ஆவணங்கள் இல்லை என்றும், எனவே, இம்மனுவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

4) **<u>இந்த மனுவை பொறுத்தவரை தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனுதாரர்/ பி.வா.சா.1 ஐ மீண்டும் அழைத்து விசாரணை செய்ய அனுமதி அளித்து உத்தரவிட வேண்டுமா? இல்லையா? என்பதேயாகும்.</u>**

5) இந்த மனுவை பொறுத்தவரை இருதரப்பிலும், வாய்மொழி சாட்சியத்தையும் மற்றும் சான்றாவணத்தையும் முன்னிறுத்தவில்லை. இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டது. இரு தரப்பு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

6) இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கின் 1ம் பிரதிவாதியின் பொது அதிகார முகவர் ஆவார். இம்மனுவின் எதிர்மனுதாரர் அசல் வழக்கின் வாதி ஆவார்.

6.1) எதிர்மனுதாரர்/வாதியால் விளம்புகை பரிகாரம், நிரந்தர உறுத்துக் கட்டளை மற்றும் செயல் உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது பி.வா.சா.2 ன் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) மனுதாரர் தரப்பில், இ.ம.எண்.12/2025 உடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கை தீர்மானிக்கக்கூடிய முக்கியமான ஆவணங்கள் என்றும்,

மேற்படி ஆவணங்களின் முக்கியத்துவம் தற்போது தான் தெரிய வந்தது என்றும், எனவே, மேற்படி ஆவணங்களை குறியீடு செய்யும் பொருட்டு பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட மனுதாரரை மீண்டும் அழைத்து விசாரணை செய்ய வேண்டியது அவசியம் எனக் கூறப்பட்டுள்ளது.

8) மேலே விவாதித்த சங்கதிகளை பரிசீலனை செய்கையில், 1ம் பிரதிவாதியின் பொது அதிகார முகவரான இம்மனுவின் மனுதாரர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவரது சாட்சியம் முடிவடைந்து விட்டது. அதன் பின்னர், 1ம் பிரதிவாதி அவரை பிரதிவாதி தரப்பு சாட்சியாக விசாரிக்க தாக்கல் செய்யப்பட்ட மனுக்களானது பொது அதிகார முகவரான இம்மனுவின் மனுதாரர் முதலில் சாட்சியாக 1ம் பிரதிவாதிக்கு முன்பே விசாரணை செய்யப்பட்டு விட்டதாலும், 1ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் அவரை பொது அதிகார முகவர் விசாரணை முடிந்த பின்னர் 1ம் பிரதிவாதியை சாட்சியாக விசாரித்துக் கொள்ள எந்தவிதமான அனுமதியும் பெறாமல் மனு தாக்கல் செய்திருந்ததால் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது.

9) 1ம் பிரதிவாதி அவரை விசாரிக்க அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது. அதனால் அவர் தரப்பில் உள்ள ஆவணங்களை நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்படாமல் உள்ளது என்பதால், மேற்படி ஆவணங்களை 1ம் பிரதிவாதியின் அதிகார முகவர் ஏற்கனவே பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதால், அவர் மூலமே குறியீடு செய்ய மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி தரப்பில் அவர் தரப்பு ஆவணத்தை அவரது அதிகார முகவர் மூலம் தான் தற்போது குறியீடு செய்ய வாய்ப்பு உள்ளது. மேலும், அவரது தரப்பு எதிர்வாதத்தை 1ம் பிரதிவாதி அவரது அதிகார முகவர் மூலம் மட்டுமே முன் வைக்க முடியும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

10) மனுதாரர் தரப்பில், குறியீடு செய்ய கோரும் ஆவணங்களை குறியீடு செய்வதால் எதிர்மனுதாரருக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. மேலும், மேற்படி ஆவணங்களை குறியீடு செய்தால் இவ்வழக்கினை சரியாக தீர்வு காண்பதற்கு வாய்ப்பு இருந்தாலும், இருக்கலாம் என்பதாலும், எதிர்மனுதாரர் அவரது ஆட்சேபணையை மேற்படி ஆவணங்களை குறியீடு செய்யும் போது தெரிவித்துக் கொள்ளலாம். மேலும், குறுக்கு விசாரணையில் மேற்படி ஆவணங்களைப் பற்றி கேள்வி கேட்டுக் கொள்வதற்கு வாய்ப்பு உள்ளது. எனவே, நீதியின் நலன் கருதியும், வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு இம்மனுவினை அனுமதித்து உத்திரவிடலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது. மனுதாரர் மேற்படி ஆவணத்தை குறியீடு செய்வதற்காக மட்டும் தனது தரப்பு சாட்சியத்தை அழைக்க வேண்டுமென்ற நிபந்தனையுடன் இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY

orders uploaded on 24.02.2026.
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.02.24 18:03:37 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

<u>மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u> - இல்லை
<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u> - இல்லை

MARIMUTHU R MUNIYASAMY

orders uploaded on 24.02.2026.
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.02.24 18:03:44 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

முதன்மை மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி

**இ.ம.எண்.14/2025 இன்**

**அ.வ.எண்.235/2022**

சீரான/ வரைவு – உத்தரவு

**24.02.2026.**